சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 24.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 128/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | பாலச்சந்தர் |
| தந்தை பெயர் | : | கதிரேசன் |
| கிராமம் | : | கோவில்பட்டி |
| தாலுக்கா | : | கோவில்பட்டி |
| தொழில் | : | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

10 மற்றும் 11 எதிரிகளுக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் இருந்து வருகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். (இந்த வழக்கின் தாய் வழக்கான SSC No. 42/2025 என்ற வழக்கில் சாட்சி விசாரணை செய்யப்பட்டதை தொடர்ந்து குற்றவியல் நடைமுறை விதிகளில் உள்ள விதி 32 (3) மற்றும் 32 (5) ன்படி இந்த வழக்கிலும் சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளபடுகிறது.)

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டம், இணையவழி குற்ற தடுப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவாரூர் மாவட்டத்தில், மன்னார்குடி உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மன்னார்குடி உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த என்னை இவ்வழக்கில் புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.110/SJ&HR/TVR/2021, Dated: 12.10.2021-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. இதனை தொடர்ந்து இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். உடனே சம்பவ இடம் சென்று அ.சா-1 ராதிகா, அ.சா-2 ராஜாராமன், அ.சா-3 உதயசந்திரன், அ.சா-4 சுரேஷ், சாட்சி பிரபாகரன் மற்றும் கலைமதி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

3. பின்னர் அன்றைய தினமே 20.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் அ.சா-7 மாரிமுத்து மற்றும் சாட்சி சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். பார்வை மகஜரில் உடனிருந்த சாட்சியிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-6** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் மாரிமுத்து மற்றும் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த தடைய பொருட்களான பிளாஸ்டிக் நாற்காலிகள் 5 மற்றும் கிழந்த நிலையில் உள்ள பிளக்ஸ் ஆகியவைகளை மகஜர் தாயர்

செய்து கைப்பற்றினேன். அந்த பிளாஸ்டிக் நாற்காலிகள் 5 **சா.பொ-1** வரிசையாகவும், கிழந்த நிலையில் உள்ள பிளக்ஸ் **சா.பொ-2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ-1 வரிசை மற்றும் சா.பொ-2 ஆகியவை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்னர் கடந்த 13.10.2021 ஆம் தேதி சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் மூவாநல்லூர் கிராமத்தை சேர்ந்த உலகநாதன் மகன் பாலகுரு மற்றும் சங்கரன் மகன் பாண்டியன் ஆகியோர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டதாக தெரிய வந்ததால் அவர்களை இவ்வழக்கின் எதிரிகளாக சேர்த்து சிறப்பு அறிக்கை ஒன்று தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து புலன் விசாரணை தொடர்ந்து மேற்கொண்டேன். அந்த சிறப்பு அறிக்கை **அ.சா.ஆ-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பின்னர் 13.10.2021 தினமே 11.15 மணிக்கு மன்னார்குடி ராஜகோபாலசுவாமி எதிரே உள்ள கல்தூண் அருகில் நின்று கொண்டிருந்த 4ம் எதிரி பாலகுரு மற்றும் 12ம் எதிரி பாண்டியன் என்பவர்களை காரணம் கூறி கைது செய்தேன். அப்போது அங்கிருந்த சாட்சிகளான தினகரன் மற்றும் பெரமையன் ஆகியோர் முன்னிலையில் 4ம் எதிரி பாலகுரு என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி தான் முதுகில் மறைத்து வைத்திருந்த ஆர்.எஸ்.பதி கம்பை எடுத்து ஆஜர் படுத்தினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்சொன்ன சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் அதே சாட்சிகளை அழைத்துக்கொண்டு மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவில் முன்பு உள்ள கல்மண்டம் அருகில் தன்னிடமிருந்து 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டையை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டை **சா.பொ-3** ஆகவும், அந்த கைப்பற்றுதல்

மகஜர் **அ.சா.ஆ-11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மகஜரில் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சா.பொ-3 ஆன 54 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. கடந்த 22.10.2021 ஆம் தேதி சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் மூவாநல்லூர் கிராமத்தை சேர்ந்த கஜேந்திரன் மகன் ராமசாமி மற்றும் நாகப்பன் மகன் திராவிடச்செல்வன், பெத்தையன் மகன் விக்கி (எ) விக்னேஷ்வரன், அரி மகன் பிரகாஷ் ஆகியோர்கள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டதாக தெரிய வந்ததால் அவர்களை இவ்வழக்கின் எதிரிகளாக சேர்த்து சிறப்பு அறிக்கை ஒன்று தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து புலன் விசாரணை தொடர்ந்து மேற்கொண்டேன். அந்த சிறப்பு அறிக்கை **அ.சா.ஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பின்னர் 22.10.2021 தினமே 15.05 மணிக்கு மன்னார்குடி to மூவாநல்லூர் ரோடு அண்ணா நகர் பாலம் அருகில் நின்று கொண்டிருந்த 5 ம் எதிரி ராமசாமி என்பவரை காரணம் கூறி கைது செய்தேன். அப்போது அங்கிருந்த சாட்சிகளான செல்வம் மற்றும் கோபி ஆகியோர் முன்னிலையில் 5 ம் எதிரி ராமசாமி என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியானவர் குற்றம் செய்யும்போது பயன்படுத்திய கட்டையை, தன்னுடன் எடுத்து தருவதாக கூறியுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்சொன்ன சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் அதே சாட்சிகளை அழைத்துக்கொண்டு மேற்கு தெரு, ராஜாளிகுடிக்காடில் உள்ள எதிரி ராமசாமி வீட்டிற்கு 16.00 மணிக்கு சென்றபோது ராஜாளிகுடிக்காடு, மேலத்தெரு எதிரி வீட்டின் பின்புறம் 67.5

செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டையை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த 67.5 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டை **சா.பொ.4** ஆகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-14** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மகஜரில் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சா.பொ-4 ஆன 67.5 செ.மீ நீளமுள்ள ஆர்.எஸ்.பதி கட்டை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் மற்ற எதிரிகள் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் தஞ்சையிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர்கள் என்பது தெரிய வந்தது.

8. இந்த வழக்கின் 1 முதல் 12 எதிரிகள் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா-1 வரையானவர்களின் சாதி சான்றிதழ்கள் கோரி மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் பேரில் மன்னார்குடி வட்டாட்சியர் ஜீவானந்தம் என்பவரிடம் இந்த அ.சா-1 ராதிகா, மற்றும் 12ம் எதிரி பாண்டியன் என்பவர்கள் இந்து பறையன் என்ற சாதியை சேர்ந்தவர்கள் என்பதற்கான சாதி சான்றிதழ்களை பெற்றேன். அந்த அ.சா-1 ராதிகா, மற்றும் எதிரி பாண்டியன் சாதி சான்றிதழ்கள் **அ.சா.ஆ-16 மற்றும் 17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி பிரபாகரன் என்பவர் இந்து சாம்பான் என்ற வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். சாட்சி பிரபாகரன் சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் துணை வட்டாட்சியர் நாகராஜன் அவர்களிடமிருந்து இந்த வழக்கின் உள்ள 1 முதல் 11 எதிரிகள் ஆகியோர்கள் இந்து கள்ளர் என்ற சாதியை சேர்ந்தவர்கள் என்பதற்கான சாதி சான்றிதழ்களை பெற்றேன். அந்த 1 முதல் 11 எதிரிகளின் சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ-19 மற்றும் 29** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. பின்னர் கடந்த 11.11.2021 ஆம் தேதி மன்னார்குடி அரசு மருத்துவனைக்கு சென்று அ.சா-1 ராதிகா மற்றும் பிரபாகரன் சிகிச்சை அளித்த மருத்துவர் அரவிந்த் என்பவரை விசாரணை செய்து அ.சா-1 ராதிகா மற்றும் பிரபாகரன் மருத்துவனையில் சேரும்போது பதிவு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடுகள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று விபத்து பதிவேட்டின் பின்புறம் சான்று பெற்றேன். அந்த அ.சா-1 ராதிகா மற்றும் பிரபாகரன் விபத்து பதிவேடுகள் முறையே **அ.சா.ஆ-30 மற்றும் 31** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. இதன் பின்னர் அ.சா.ஆ-4 ஆன முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ள உதவி ஆய்வாளர் முருகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுள்ளேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 24.11.2021 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று நீதிமன்றத்தில் கூறியிருந்தால் அது தவறு. சாட்சியங்கள் கூறியுள்ளதை தான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.24 18:04:10 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.